# ஊர்காவற்றுறையில் புலிகள்-ராணுவம் கடும்சமர்

(யாழ்ப்பாணம்)
ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள சின்னமூளாய், பொன்னுச்சி கடைச்சந்தி, நரந்தனை பகுதிகளிலுள்ள காவல் அரண்களில்நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர்
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் : 33 | சித்திரை 14 | ஷவ்வால் 11 | இதழ் : 76
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 27-04-1991

## கிழக்கில் தொடரும் வன்முறைகள்

(லண்டன்)
கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்தும் வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. கடந்த பத்து மாதங்களில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டிருக்கின்றனர். இவ
(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கையால் சேதமான பாடசாலைகள் புனரமைப்பு செய்யப்படும்

(உடுவில்)
யாழ்ப்பாணமாவட்ட புனர் வாழ்வு, புனரமைப்புப் பிரிவினர் கடந்த வருடம் ஜுன் மாதத்துக்குப் பின்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்
(4-ம் பக்கம் பார்க்க)

# வடக்கில் கட்டுப்பாட்டிலுள்ள இடங்களை இராணுவத்தினர் தொடர்ந்தும் பாதுகாப்பது கடினமாகும்

## பி. பி. ஸி. கணிப்பு

[லண்டன்]
இலங்கையின் வடபகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சில இடங்களை தொடர்ந்தும் அதன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது இராணுவத்தினருக்கு கடினமாகவே இருக்கும். பி. பி. ஸி. கொழும்பு முகவர் கிறிஸ்மொறிஸ் எழுதிய இலங்கைக் கண்ணோட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவர் தமது கண்ணோட்டத்தில் மேலும் தெரிவித்திருந்ததாவது:

வடபகுதியில் பெரும்பாலான பகுதிகள் இன்னும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சில இடங்களை இராணுவம் தொடர்ந்தும் அதன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது இராணுவத்தினருக்கு கடினமாகவே இருக்கும்.

## வடக்கில் 6 படையினர் பலி 20 பேர் படுகாயம்

(கொழும்பு)
வடபகுதியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின்போது 6 படையினர் கொல்லப்பட்டதாகவும் 20 படையினர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு உயரதிகாரி ஒருவர் நேற்று கொழும்பில் இத்தகவலைத் தெரிவித்தார். (க)

## மன்னம்பிட்டிமுகாமிலிருந்து வெளியேறிய படையினர்மீது புலிகள் கிளைமர் தாக்குதல்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் மன்னம்பிட்டி இராணுவ முகாமிலிருந்து வெளியேறி கொக்கட்டிச்சோலை பகுதிக்கு சென்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கிளைமர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

நேற்றுமுன்தினம் காலை எட்டுமணிக்கு இத்தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.

## இந்திய அதிகாரியைத் தாக்கிய இரு பொலிஸார் வேலை நீக்கம்!

(கொழும்பு)
கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயத்தைச்சேர்ந்த ஊழியர் திரு ராஜேந்திரனைத் தாக்கியது தொடர்பாக, கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸ்காரன்கள் இம்மாதம் 24ம் திகதியிலிருந்து வேலையிலிருந்து இடை நிறுத்தப்பட்டார்கள்.

இச்சம்பவம் தொடர்பாக இலங்கை இந்தியாவிடம் முன்னர் மன்னிப்பு கேட்டிருந்ததும் தெரிந்ததே. (பூ)

## சுதந்திரக்கட்சியின் மொழிக்கொள்கையே தமிழர்களை ஆயுதம் ஏந்த வைத்தது! - ஜனாதிபதி

(கொழும்பு)
முன்னர் ஆட்சி செய்த சிறிலங்கா சுதந்திர கட்சியின் குறுகிய விரோத செயல்களே இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு காரணமாகும்''

இவ்வாறு ஜனாதிபதி திரு. பிரேமதாஸா மதியமாகாண தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினார்.
(4ம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்கள் மீது இல. கடற்படை தாக்குதல்

(சென்னை)
இந்திய மீனவர்கள் கச்சதீவு கடற்பகுதியில் வைத்து இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டதுடன் அவர்களது படகும் படையினரால் பெரும் சேதமாக்கப்பட்டன.

ராமேஸ்வரத்திலிருந்து படகொன்றில் மீன்பிடிப்பதற்காக ஐந்து மீனவர்கள் வந்துகொண்டிருந்த போது கச்சதீவு கடற்பகுதியில் வைத்து இலங்கை கடற்படையினரால் வழிமறித்துதாக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த மீனவர் ஒருவர் ராமேஸ்வரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ரி)

## தொழில் பாதிப்பு குறித்து ஆளுநரிடம் முறையீடு

(சென்னை)
இலங்கை கடற்படையினரின் அச்சுறுத்தலினால் தமிழக மீனவரின் மீன்பிடித் தொழில் பாதிப்படைந்துள்ளதாக ராமேஸ்வரம் மீனவர் சங்கம் தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங்கிடம் முறையீடுசெய்துள்ளனர்.

இதுதொடர்பாக மேற்படி சங்கம் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''இலங்கை கடற்படையினரின் தாக்குதலிலிருந்து தமி
(4-ம் பக்கம் பார்க்க)

## படையினரால் ஒருவர் சுட்டுக்கொலை மற்றொருவர் கைது

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு மாவட்டத்தில் ரோந்து சென்ற இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர் ஒருவரை சுட்டுக்கொன்றதோடு மற்றொருவரையும் கைதுசெய்து முகாமுக்கு கொண்டு சென்றுள்ளனர்.

கரடியனாறு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் காலை ஏழு மணியளவில் வெளியேறிய இராணுவத்தினர் இலுப்படிச்சேனை என்னும் இடத்திற்கு சென்றனர்.
(4-ம் பக்கம் பார்க்க)

## தலைவெட்டப்பட்ட நிலையில் இரு சடலங்கள்

(மட்டக்களப்பு)
மட்டக்கப்பு மாவட்டத்திலுள்ள ஊறணிச் சந்தியில் நேற்றுமுன்தினம் தலைவெட்டப்பட்ட நிலையிலுள்ள 2
(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### தேவை

காய்ந்த எலுமிச்சம் கோது தேவை. மில்க்வைற் - யாழ்ப்பாணம். (எ-1249)

### விற்பனைக்கு

இயற்கை வழியே சுகவாழ்வுக்கு ஏற்றம் தரும் இயற்கை வளம் கொண்டு தயாரித்த ஒலிவ் ஸ்நானப் பவுடர் எண்ணெய்க் குளியலுக்குச் சிறந்தது கிரசு, கண், உடலுக்கு குளிர்ச்சி தருகிறது. இதவும் ஒரு மில்க்வைற் உற்பத்தி. பக்கெற் ஒன்று ரூ. 1-50 மட்டுமே. (ஏ 1244)

### பழைய புத்தகசாலை இடமாற்றம்

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், சஞ்சிகைகள், போத்தல், பித்தளை, செப்பு, கோழித்தீன் பைகள் வாங்கப்படும் விற்கப்படும். புதிய விலாசம்: சேனாதிராசா 108, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்: [சி-4676]

### ஆங்கில வகுப்புகள்

Pitmans (London) ஆங்கில Shorthand&Typing வகுப்புகள் 1-5-91ல் ஆரம்பமாகின்றன. School of Business Administration, 16 3வது குறுக்குவீதி யாழ்ப்பாணம். (சி 4681)

### தாதி பயிலுநர்

தாதி பயிலுநர் தேவை நேரில் தொடர்புகொள்ளவும். திருமதி J. சொர்ணலிங்கம், மெடிக்கல் கிளினிக், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. (சி 4684)

### தரன் படப்பிடிப்பாளர்

கலர் - கறுப்பு வெள்ளைப் படங்கள், றபர் சீல், பிளாஸ்ரிக் வேலை, விளம்பர போட், புளொக் டிசைன் மற்றும் ஓவிய வேலைகள். தரன் படப்பிடிப்பாளர், 87, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (சி 4673)

### மணமக்கள்

எம்மிடம் மணமக்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். தொடர்பு: ''மங்கள ஏஜென்சி'' கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம் (சி-4686)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

வருடா வருடம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தரும் புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை வெளி மாணவர்களுக்கு (முகவரி லாவது) 219, நாவலர் வீதியில் 28-04-91 ஞாயிறு மு. ப 8-00 மு. ப 10-30 மணி நேரங்களிலும், குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதியில் (மக்கள் வைத்தியசாலை முன்பாக) பி. ப. 4-00 மணிக்கும் நடைபெறும். பெறுபேறுகள், விளக்கம் 05-05-91 ஞாயிறு மு. ப. 8-00 மணிக்கு நடைபெறும். (சி-4685)

★ குவைத், சவுதியில்

# 2 லட்சம் இலங்கையருக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு) குவைத், சவூதி ஆகிய நாடுகளில் இரண்டு லட்சம் இலங்கையருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவிருகிறது. இதற்கான ஏற்பாடுகளை இலங்கை தொழில் அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. குவைத்தில் ஏற்கனவே தொழில் செய்து யுத்த நெருக்கடியினால் அண்மையில் நாடு திரும்பியவர்களுக்கு இவ்வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படவிருக்கிறது. (ரி)

## ஆலயம் உடைக்கப்பட்டு வேல்கள், உண்டியல் திருட்டு

(பருத்தித்துறை) பருத்தித்துறை குருமணல் கந்தசுவாமி கோவில் நள்ளிரவு நேரத்தில் கதவுகள் உடைக்கப்பட்டு, மூலஸ்தானத்தில் இருந்த நான்கு தங்க வேல்களும் உண்டியல் பணமும் திருடப்பட்டுள்ளது

1935ம் ஆண்டு குருமணல் கந்தசுவாமியாருக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றபோது ஆலயத்தில் வைக்கப்பட்ட சக்திவேலான தங்கவேலும் கொள்ளையடிக்கப்பட்ட நான்கு தங்கவேல்களில் ஒன்றாகும். கொள்ளையடிக்கப்பட்ட தங்கவேல்களின் பெறுமதி சுமார் 30ஆயிரம் ரூபாவெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (52)

## ஆலயத் திருவிழா

(யாழ்ப்பாணம்) அரியாலை புனித யூதாததேயு ஆலயத் திருவிழா கடந்த 24-ம் திகதி வியாழக்கிழமை மாலை 5-00 மணி ஆராதனையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து மாலை ஆராதனைகளும் இன்று மாலை நற்கருணை ஆராதனையும் நாளை ஞாயிறு காலை 7-00 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப ஆசீரும் பங்குத் தந்தை சுவாமி ஜெபசீலன் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

### ஒன்றுகூடல் நிகழ்ச்சி

(நாவற்குழி) சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது. (107)

## யாருடையது?

(யாழ்ப்பாணம்) வட்டுக்கோட்டை சங்கரத்தைச் சந்தியில் பாவற்குளம், வாரிக்குட்டியூரைச் சேர்ந்த பா. லலிதா என்பவரது அடையாள அட்டையும் ந. பாலசுப்பிரமணியம் என்பவரது வேறும் சில சாதாரக் குறிப்பு புத்தகங்களும் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.

## பதுங்கு குழிகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்) பொதுமக்களின் நலன்கருதி கோண்டாவில் உதயதாரகை சனசமூகநிலையத்தினால் கே. கே. எஸ். வீதி, மானிப்பாய் வீதியோரங்களில் இருபதுங்குகுழி அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வீதியிலுள்ள வர்த்தகர்களின் உதவியுடன் நிலையத் தலைவர் ந. தில்லைநாதனின் முயற்சியினால் இப்பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## இடப்பெயர்ந்தோர் மீளக்குடியேற்றம்

(பூநகரி) மன்னார் மாவட்டத்தில் பரப்புக்கடந்தான், ஆண்டான்குளம், ஆட்காட்டிவெளி பகுதிகளிலிருந்து ராணுவம் வெளியேறியதையடுத்து இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு திரும்புகின்றார்கள்.

குறிப்பிடப்பட்ட பகுதிகளில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றனர்.

புலிகளின் தாக்குதலை சமாளிக்க முடியாத இராணுவத்தினர் இப்பகுதியிலிருந்து பின்வாங்கிச் சென்றனர். [23]

### சித்திரைகஞ்சி

(யாழ்ப்பாணம்) கோப்பாய் மத்தி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த சித்திரைக்கஞ்சி வழங்கப்படும் வைபவம் நாளை நடைபெறவுள்ளது.

பகல் அபிஷேக ஆராதனைகளும், மாலை அம்பாள் வீதி உலாவும் இடம்பெறும்.

## இராசிபலன்

27-04-1991

சனிக்கிழமை

சதுர்த்தி பி. இ. 2-13 வரை, அத்தம் மு. ப. 11-10 வரை சித்திரைச் சித்திரை, மரணயோகம் இராகுகாலம் காலை 8-59 முதல் 10-29 வரை, சுப நேரம் மாலை 2-59 முதல் 4-29 வரை.

மேடம்: நல்லோர் சிநேகம், குடும்பச்சிறப்பு, பாராட்டு

இடபம்; குடும்பச் செலவு, அந்நியர் தொல்லை, அவமதிப்பு

மிதுனம்: வயிற்றுக் ரோகம், தொழில் பாதிப்பு, சகோதர உதவி.

கடகம்: மனநிறைவு, தொழில் முன்னேற்றம், புதிய உறவு.

சிங்கம்: கருத்துமோதல், குடும்பப்பிரிவு, பழைய நினைவுகள்.

கன்னி: நற்கருமம், தொழிலில் லாபம், அறிஞர் சந்திப்பு

துலாம்: புறம்போக்கு, விசாரணை, குடும்பப் பகை

விருச்சிகம்: குடும்ப மகிழ்ச்சி, பயணம், தொழில் லாபம்.

தனுசு: ஆலய தரிசனம், குடும்பக்கவலை, மனப் போராட்டம்

மகரம்: விரோத மனப்பான்மை, வைத்தியச்செலவு அலைச்சல்

கும்பம்: பகைவர்தொல்லை உடல் உபாதை, பணக்கஷ்டம்

மீனம்: தொழில்போட்டி, குடும்ப சுகம், வாக்குவாதம்.

- ஜோதியர்


## 12வது ஆண்டு நினைவஞ்சலி



**மகேசன் வரதராஜன்**

தோற்றம்: 21-04-1950 | மறைவு: 27-04-1979

குடும்பத்தின் ஒளிவிளக்காய், நேர்மையின் இலக்கணமாய், பாசத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தவனே உன்னுடைய பிரிவு எங்களால் என்றும் நிறைவு செய்யமுடியாத வெற்றிடம்.

உமது ஆத்மா சிவபதமடைய இறைவனைப்பிரார்த்திக்கிறோம்.

அன்பு மறவாத

மனைவி, மகள், சகோதர, சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள்.

''லிங்கவாசா'' நவாலி. (சி-4682)



## தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தொழில் வாய்ப்புப் பெறுவதற்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்!

★ றேடியோ, T. V. டெக் றிப்பியறிங்

சகல இன றேடியோ, T. V. வீடியோ டெக் திருத்தும் முறைகள் ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். —காலம் 4 மாதம்

குறிப்பு;— முன்னர் றேடியோ, T. V படித்தவர்கள் வீடியோ டெக் றிப்பியறிங் படிக்க அனுமதிக்கப்படுவர். —காலம் 3 மாதம்

★ றீ வைண்டிங்

மின் மோட்டார், மின்விசிறி, ராண்ஸ்போமர் டைனமோ றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும் —காலம் 4 மாதம்

★ எலக்ரிக்கல் வயறிங்

வீட்டு மின்சார வேலை, மின்சாரப்பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும் —காலம் 2 மாதம்

★ SPOKEN ENGLISH — காலம் 3 மாதம்.

பிரத்தியேகமாக தனிப்பட்ட மாணவர்களுக்கும் குறுகிய காலத்தில் பயிற்சியளிக்கப்படும்.

★ எயர்கொண்டிசன் றிப்பியறிங்

சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும் —காலம் 4 மாதம்

புதிய பயிற்சிகள் ஆரம்பம்:

01-05-1991 (கிழமை நாட்கள்)

05-05-1991 (சனி, ஞாயிறு)

**JAFFNA TECHNICAL INSTITUTE**

52|1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(றெயில்வே கடவை அருகாமை மேல் மாடி)

(ஏ-1247)

# யாழ். தவில் வித்துவானுக்கு தமிழக கலைமாமணி விருது

(சென்னை)

தமிழ்நாடு அரசின் இவ் வருடத்திற்கான கலைமாமணி விருது யாழ். தவில் வித்துவான் கணேசனுக்கு வழங்கப் பட்டது.

மலேசியா, சிங்கப்பூர் உட்பட பல நாடுகளின் அழைப்பின் பேரில் வெளிநாடுகளுக்குச் சென்று தவில் கச்சேரி நடத்திய கலைஞர் கணேசன் இந்தியாவில் பலதடவைகள் தவில்கச்சேரி நடத்தியுள்ளார்.

இவரது தவில் கச்சேரியை வியந்து பாராட்டிய தமிழ்நாடு அரசு கலைமாமணி என்னும் விருதினை வழங்கி கௌரவித்துள்ளது. (ரி)

## தனுஷ்கோடியில் ஆயுதங்கள், வெடிமருந்துகள் பொலிஸாரால் மீட்பு

(தனுஷ்கோடி)

தனுஷ்கோடி கடற்கரை பகுதியில் புதைத்து வைக்கப் பட்டிருந்த ஆயுதங்கள் வெடி மருந்துகள் தமிழ்நாடு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இரண்டு ஏ. கே. 47 துப்பாக்கி, மகசின்கள், 56 ரவைகள், வாக்கி டோக்கி கருவிகள் போன்றவையே நேற்று முன்தினம் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டவையாகும்.

இது தொடர்பாக இலங்கையர் ஒருவர் தமிழ்நாடு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இதேவேளை ராமேஸ்வரத்தில் இலங்கைக்கு கடத்துவதற்கென மறைத்து வைக்கப் பட்டிருந்த 450 லீற்றர் டீசல் 40 லீற்றர் ஒயில் போன்றவற்றையும் பொலிஸார் பறிமுதல் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

## தொழில் கல்விநெறி பயிற்சி தொடக்க விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் புதிதாக ஆரம்பிக்கவுள்ள தொழிலாளர் கல்விச் சான்றிதழ்ப் பயில் நெறியின் தொடக்க விழா, மே முதலாம் திகதி புதன்கிழமை முற்பகல் 8-00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா இப்பயில்நெறியைத் தொடக்கி வைக்கவுள்ளார்.

## சீருடையின்றி அவதியுறும் தபாலக ஊழியர்கள்

(மாங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தபாலக ஊழியர்களுக்கான சீருடைகள், கடந்த மாதம் முதல் வந்து சேராததினால் கடமை நேரத்தில் அணியசீருடைகள் இல்லாமல் அவதியுறுகின்றனர்.

பரீட்சைகளுக்கான பற்றுச்சீட்டு மற்றும் போதிய பத்திரங்களும் சில தபாலகங்களில் இல்லாததால் மக்கள் தமது தபாலகச் சேவையைப் பூர்த்திசெய்ய முடியாதிருப்பதாக புகார் செய்கின்றனர். (150

## குஞ்சித பாதனே! அஞ்சலென் றருள்வாய்!!

ராகம்: நாட்டை
தாளம்: ஆதி

பல்லவி

நெஞ்சினில் வளருமென் குஞ்சர நாதனே!
அஞ்சலென் றருள்வாய் கல்வயல் வாசனே!!
(நெஞ்—)

அனுபல்லவி

வஞ்சனை வெஞ்சினம் விஞ்சுமென் நெஞ்சினை
சஞ்சமா மலர்நிறை மஞ்சமாய்க் கொண்டவா!
(நெஞ்—)

சரணம்

உன்தனை எண்ணியே உருகிடும் உள்ளமில்லேன்!
உன்புகழ் எண்ணியே நீர்விடும் கண்களில்லேன்!!
உன்னருட் பெருமையை உணர்ந்திடும்!!
அறிவுமில்லேன்!
உன்னரும் அன்பனுய் உயர்ந்திடும்
எண்ணமில்லேன்!!
(நெஞ்—)

-:'முருகு'

[இன்று (91-04-27) சாவகச்சேரி-கல்வயல் பெருஞ்குளம் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் ஆலய தேர்த்திருவிழா]

## பாலமுரளி கிருஷ்ணாவிற்கு பத்மபூஷன் விருது

(புதுடில்லி)

இந்திய மத்திய அரசின் பத்மபூஷன் விருது பிரபல பாடகர் பாலமுரளி கிருஷ்ணாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசின் இவ்வருடத்திற்கான விருதுகள் இரு தமிழ்நாட்டு கலைஞர்களுக்கு வழங்கப்பட்டன.

இசைத்துறையில் தனக்கென ஒரு பணி அமைத்துக்கொண்ட டாக்டர் பாலமுரளி கிருஷ்ணாவிற்கு பத்மபூஷன்விருதும் நாட்டியக் கலைஞரான அலமேலு வள்ளிக்கு பத்மஸ்ரீ விருதும் வழங்கப் பட்டது. (ரி)

## தமிழ்நாடு தேர்தல் களம்

### 2,300 பேர் மனுதாக்கல்

தமிழ்நாடு சட்டசபைக்கு நேற்றுமுன்தினம் வரை 2300 பேர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர் தமிழ்நாட்டிலிருந்து லோகசபைக்கு 225 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

### லோகசபைக்கு

நேற்றுமுன்தினம் 234 இடங்களைக் கொண்ட தமிழ்நாடு சட்டசபைக்கு 200 பேரும் 39 இடங்களைக் கொண்ட லோக சபைக்கு மூன்று பேரும் வேட்புமனு தாக்கல்செய்தனர்.

### 6 வேட்பாளர்கள்

பாட்டாளி மக்கள் கட்சியும் பாரதீய ஜனதா கட்சியும் மூன்றுவது பட்டியலை நேற்றுமுன்தினம் வெளியிட்டன. பாரதீய ஜனதா கட்சி தமிழக சட்டசபைக்கு 6 பெயர்களை வெளியிட்டுள்ளது.

### மதுரையில்

மதுரையில் இரண்டு லோகசபை தொகுதிகளுக்கு ஏழு பேரும் 15 சட்டமன்ற தொகுதிகளுக்கு 30 பேரும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

### ஈழப் பிரச்னை

இலங்கைப் பிரச்னைக்கு அரசியல்தீர்வு காண தொடர்ந்து தமது கட்சி வலியுறுத்தும் என மார்க்ஸிச கம்யூனிஸ்கட்சி வெளியிட்டுள்ள 20 அம்சத் திட்டத்தில் தெரிவித்துள்ளது, நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்கவும், படித்த வாலிபர்களுக்கு நிவாரணம் வழங்கவும் கட்சி முயற்சிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காங்கிரஸ் பட்டியல்

தமிழ் நாட்டின் 2 தொகுதிகளுக்கு இ. காங்கிரஸ் கட்சி வேட்பாளர் பெயர்களை அறிவித்துள்ளது. புதுக்கோட்டையில் சுந்தரராஜனும், வந்தவாசியில் கிருஷ்ணசாமியும் போட்டியிடுவார்கள் என அறிவித்துள்ளது.

### பிரசார கூட்டங்கள்

அ. தி. மு. க, காங்கிரஸ், தி. மு. க. கட்சிகள் பிரசாரவேலைகளை ஆரம்பித்துவிட்டன. கிராமங்கள் தோறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நள்ளிரவுக்கு பின்னரும் நடைபெற்று வருகிறது. முக்கிய தலைவர்கள் தினமும் இருபது கூட்டங்களுக்கு மேல் கலந்துகொள்கின்றார்கள்.

### காங்கிரஸ் கூட்டங்கள்

காங்கிரஸ் கட்சியின் முக்கிய கூட்டங்களில் திரு. ராஜீவ் காந்தி கலந்துகொள்வார் அநேகமாக அடுத்த மாத முற்பகுதியில் இக்கூட்டங்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திரு ராஜீவ்காந்தியும் இரண்டு தடவைகள் தமிழ்நாடு பிரசாரத்திற்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ★ புதையல் பயங்கரம் மண்டை ஓடுகள், எலும்புகள் பிபிலைக் காட்டுக்குள் மீட்பு

(மாத்தறை)

பிபிலை பொலிஸ் பிரிவில் கராடுகல காட்டில் மனித மண்டை ஓடுகளும் எலும்புக் கூடுகளும் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் காட்டில் ஒரு கற்குகைக்கு அருகில் புதையல் இருப்பதாகவும் அதனை மீட்க முயலும் ஒரு குழுவே பலரை பலிகொடுத்துள்ளதாகவும் பொலிஸ்விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இக் காட்டுக்குள் ஒரு குழு அடிக்கடி வருவதாகவும் பிறகு வெட்டவென வெளியிடத்தவர்களை அழைத்து வருவதாகவும் பின் அவர்கள் திரும்பி வருவதில்லையென்றும் அப்பகுதி கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து அந்த குழுவை பிடிக்கும் தீவிர முயற்சியில் பொலிசார் இறங்கியுள்ளதுடன் குறிப்பிட்ட கற்குகையைச் சுற்றியும் பலத்த காவல் போடப்பட்டுள்ளது.

இதுவரை 10க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (சி)

## அன்பளிப்பு பொருட்கள்

(நாவற்குழி)

கைதடி அரசினர் ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் பிரசவ விடுதிக்கு கடந்த வருடம் நவம்பர் 4ம் திகதி டாக்டர் சிவசக்தியினால் அன்பளிப்புச்செய்யப்பட்ட சுமார் 7000ரூபா பெறுமதியான சிசுக்களை நிறுக்கும் தராசு இதுவரை பிரசவ விடுதிக்கு வந்து சேரவில்லை என தெரிவிக்கப்படுகிறது. [107]

## மரண வீட்டிலும் வேட்பாளர்கள் போட்டி

[மாத்தறை]

மரணச் சடங்கு ஒன்றில் இரங்கல் உரையாற்றப் பல கட்சிகளைச் சேர்ந்த 28 உறுப்பினர்கள் சந்தர்ப்பம் தேடிய சம்பவம் அண்மையில் வலஸ்முல்லைப் பகுதியில் இடம் பெற்றது.

ஒவ்வொரு கட்சி அபேட்சகர்களும் சைக்கிள், மோட்டார் சைக்கிள், கார்களில் தேர்தல் சின்னம் பொறித்த கொடிகளுடன் மரண வீட்டுக்குப் படையெடுத்தனர்

இறந்தவரின் குணதிசயங்களைப் பற்றி இரங்கல் உரையாற்ற இவர்கள் ஆவல் கொண்டு வீட்டாரை வற்புறுத்தினர்.

ஆனால் மரணவீட்டார் நன்கு சிந்தித்த பின்னர் எவருக்குமே அனுமதி வழங்கவில்லை (சி)

## அதிபர்களுக்கான கல்விக்கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி வலிமேற்கிலுள்ள பண்டத்தரிப்பு கல்விக்கோட்டப் பகுதியில் கடமை புரியும் சகல அதிபர்களும், கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கல்விக் கருத்தரங்கில் தவறாது கலந்துகொள்ளும்படி கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் கோரியுள்ளனர்.

கல்விக் கருத்தரங்குகள் கீழ்க்காணும் இடங்களில் நடைபெறும்; யாழ். கல்விக் கோட்டம் இன்று மு. ப. 9மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்திலும், வடமராட்சிக் கல்விக் கோட்டம் இன்று பி. ப. 2மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறையிலும், தென்மராட்சிக் கல்விக் கோட்டம் நாளை பி. ப. 2மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும், வலி, மேற்கு பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் நாளை பி. ப. 2மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.

## எழுதுவினைஞர் நேர்முகப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழகத்தில் எழுதுவினைஞருக்கான நேர்முகப்பரீட்சை நேற்று முன்தினம்நடைபெற்றது.

எழுத்துப்பரீட்சையில் சித்தியடைந்த 34 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். [152]

## மெய்வல்லுநர் போட்டி

(கொழும்புத்துறை)

இலங்கைத் தேசிய சர்வோதய சிரமதான இயக்கம் கொழும்புத்துறை எழிலூர் சன சமூக நிலைய அன்னை வேளாங்கன்னி பாலர் பாடசாலை நடாத்தும் மெய்வல்லுநர் போட்டி மேற்படி சன சமூக நிலைய முன்றலில் நிலையத்தலைவர் திரு எஸ். யேசுராசா தலைமையில் இன்று சனிக்கிழமை பி. ப. 1மணிக்கு நடைபெறும்.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை மராமத்துப் பகுதிப் பொறியியலாளர் திரு. பி. தவராசா கலந்துகொள்வார். பாலர் பாடசாலைச் சிறுவர்களின் விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறும். (154)

## விமானத்தளம்

[சென்னை]

கடலோர காவல் படையின் இரண்டாவது விமானத்தளம் நேற்று சென்னை மீனம்பாக்கத்தில் தொடக்கிவைக்கப்பட்டது. (பூ)

## இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தினரின் முக்கிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கொக்குவில் மேற்கு ஞானபண்டித வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

சகல சுருட்டுத் தொழிலாளர்களும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளவேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளனர். தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். (109)

## தொழில் பாதிப்பு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

முக மீனவர்களைக் காப்பாற்ற வேண்டும்.

மீன்பிடித் தொழில் செய்து வாழ்க்கை நடத்தும் எம்மவர்கள் இலங்கை கடற்படையினரின் நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டுவருகின்றார்கள் எனவே இந்தப் பிரச்சனையை ஆளுநர் தலையிட்டு தீர்க்கவேண்டும். (ரி)

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

### விஞ்ஞானபீட பரீட்சைகள்

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கால அட்டவணையின்படி விஞ்ஞான பீட முதலாம் இரை ஆண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் திங்கட்கிழமை 91.04.29 ஆம் திகதி முதல்வருட பரீட்சையுடன் ஆரம்பமாகி மற்றைய வருட பரீட்சைகளும் தொடர்ந்து நடைபெறும். தற்போதைய நாட்டு நிலைகாரண பரீட்சைகள் பின்போடப்படவில்லை. விஞ்ஞானபீட மாணவர்கள் இதனை கவனிக்கவும்.

- பதிவாளர்

[எ 1251]

# அதிகளவுபதநீர்உற்பத்திசெய்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்படும்

[யாழ்ப்பாணம்]

இவ்வருடம் அதிகளவு பதநீர் உற்பத்தி செய்த பனைத் தொழில் வல்லுநர்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுவர்.

பனை, தென்னைவள அபிவிருத்தி ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்திருக்கிறது.

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் சுயதொழிலை ஊக்குவிக்கு முகமாக ஒன்றியம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு பேராதரவு காட்டி பதநீர் உற்பத்தியாளரையும் வருடா வருடம் கௌரவிக்க பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம் தீர்மானித்துவிட்டது-

இலங்கையில் அதிகமான பதநீர் உற்பத்தி செய்த முதல் மூன்று தொழிலாளர்களுக்கும் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங்கள் எதிர்வரும் மே தினத்தன்று வழங்கப்படும்

## வீர வணக்கம்

(யாழ்ப்பாணம்)

குப்பிளானில் நேற்று ராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் லெப்டினன்ற் தியாகு (ஆழ்வாப்பிள்ளை தர்மராஜா, குச்சவெளி, திருகோணமலை) வீரமரணமடைந்தார்.

இதேவேளையில் ஊர்காவற்றுறையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மோதலில் காயம் அடைந்து பின் வீரமரணம் அடைந்த குட்டி (மாணிக்கம் ரவீந்திரன், புத்தூர்-மேற்கு) ஆகியோரின் புகழுடம்புகள் இன்று சனிக்கிழமை புத்தூர் வேம்பிராயில் காலை ஒன்பது மணி முதல் நண்பகல் 12 மணி வரை பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமம் ஆகும்?

## இந்தியத் தேர்தல்: வேட்புமனுத் தாக்கல் நேற்றுடன் முடிவு

(சென்னை)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும், மாநிலத்தேர்தலுக்கும் வேட்பு மனு தாக்கல் செய்யும் இறுதிநாள் நேற்றுடன் முடிவடைந்தது

கடைசி நாளான நேற்று அநேகமானோர் வேட்புமனுக்கள் தாக்கல் செய்தனர்

இதுவரை கிடைத்த தகவலின்படி தமிழ்நாடு சட்ட சபையின் 234 தொகுதிகளுக்கும் 2500 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

தமிழ் நாட்டின் நாடாளுமன்றின் 39 தொகுதிக்கும் 350 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். (பூ)

## பொன்னாலை பாலம் தகர்ப்பு

(காரைநகர்)

கலந்தலைச் சந்தியில் நின்ற இராணுவத்தினர் நேற்றுக் காலை 9-25 மணிக்கு ஒரு கவச வாகனத்தில் வந்து பொன்னாலைப் பக்கமுள்ள மூன்றாவது பாலத்தை வெடி வைத்துத் தகர்த்துள்ளனர். (பூ)

## பயிலுநர் ஆசிரியருக்கான கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

பயிலுநர் ஆசிரியர்களுக்கு நடப்பாண்டு மேற்கொள்ளவிருக்கின்ற பயிற்சி பற்றிய கருத்தரங்கு 29-ம் திங்கட்கிழமை மு. பகல் 9.00 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடக்கவுள்ளதால் சகல பயிலுநர் ஆசிரியர்களும் கலந்து கொள்ளும்படி கல்விப்பணிப்பாளர் வேண்டுகிறார்.

## மேதின ஊர்வலங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால் ஒழுங்கு செய்யப்படும் மேதின ஊர்வலத்துக்கு பூரண ஆதரவு வழங்குவதோடு ஊர்வலத்திலும் பங்குபற்றுவதென வட பிராந்திய சுருட்டு தொழிலாளர் சங்கம் தீர்மானித்துள்ளது

மேதின ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக அன்றைய தினம் காலை 8 மணிக்கு சகல சுருட்டுத் தொழிலாளர்களையும் கொக்குவிலில் உள்ள சங்கப்பணி மனையில் தவறாது வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

0 0 0

(உடுவில்)

மருதனார்மடம் சந்தியில் இருந்து மேதினத்தன்று ஊர்வலமாக செல்லும் மக்களுக்கு குளிர்பானம் சர்க்கரைத் தண்ணீர் போன்றவற்றால் தாகசாந்தி செய்ய இணுவில் பகுதி மக்களும் வர்த்தகர்களும் முன்வந்துள்ளனர்.

இணுவில், தாவடி போன்ற இடங்களில் உள்ள சந்திகளில் விசேட பந்தல்கள் இதற்கென அமைக்கப்பட்டு வருகின்றன.

0 9 0

உடுவில்)

சுன்னாகம் வர்த்தகர் சங்கத்தின் மேதின ஊர்வலம் சுன்னாகம் ஐயனார் கோவிலடியிலிருந்து ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல வர்த்தகர்களும் ஊர்வலத்தில் கலந்துகொள்ள சம்மதம் தெரிவித்திருப்பதாக வர்த்தக சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். சகல வர்த்தகர்களையும் மேதின ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காகச் சுன்னாகம் ஐயனார் கோவிலடிக்கு வருகை தருமாறும் அவர் கோரியுள்ளார். (109)

## கிழக்கில்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் பெரும்பாலானோர் தமிழர்கள்.

கடந்த ஜூன் மாதம் ஆரம்பமான மோதலின் பின்னர் காணமல் போனவர்களில் சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான தமிழர்களின் பெயர் பட்டியல்கள் இருக்கின்றன.

காணமல் போய்விட்டவர்களில் பலர் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டவர்கள் என கூறப்படுகிறது.

## சுதந்திரக் கட்சியின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் பேசுகையில் 1956 இல் சிங்களம் மாத்திரம் என்ற சட்டத்தை இயற்றியதைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் ஆயுதம் எடுக்க முற்பட்டார்கள் இதனால் கடும் கலவரங்கள் ஏற்பட்டு வருகின்றன.

அந்த அரசின் மொழிக் கொள்கை தமிழர்களை அந்நியப்படுத்திவிட்டது என்று கூறினார். (பூ)

## ஊர்காவற்றுறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் வெளியேறிவந்தனர்

இராணுவத்தினர் கனரக வாகனத்திலும்,4 ட்ரக் வண்டிகளிலும் அங்கிருந்து வந்தனர். காவலரண் பகுதிகளிலிருந்து விடுதலைப் புலிகளின் காவலரண்களை நோக்கி மின்னேறுகையில் இராணுவத்தினருக்கு துணையாக இரண்டு ஹெலிகொப்டர்கள் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள், அவ்ரோ விமானம் ஆகியன தாக்குதல்களை நடத்தின. அங்கு விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர் இராணுவத் தரப்பில் சேத விபரம் தெரியவில்லை.

## வீரமரணம்

இம்மோதலின்போது விடுதலைப் புலிகள் மூவர் வீரமரணம் அடைந்தனர்.

கார்த்திக் [ராஜேஸ்வரன் சந்திரகுமார், சண்டிலிப்பாய்] ராவிக் (நாகேஸ்வரக்குருக்கள் மதுசூதனன், இணுவில்). மனோஜ் (அழகன் கருணாநிதி, கண்டி) ஆகியோரே வீரமரணமடைந்தவர்களாவர்.

இத் தாக்குதலின்போது பலாலி இராணுவ முகாமில் இருந்து ஆட்லறி ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன. (பூ)

## உறுப்பினர்களுக்கு கடன் வசதி மரண சகாயம் கிடைக்கும்

[உடுவில்]

"இக்கட்டான இன்றைய சூழ்நிலைகளிலும்கூட எமது சங்கம்சோர்வடையாது ஆசிரியர்களின் நலன்பேணி உழைத்துவருகின்றது, உறுப்பினர்களுக்கு கடன்வசதி அளித்தல், இளைப்பாற்று சகாயம், மரண சகாயம் போன்ற பல கொடுப்பனவுகளையும் சங்கம் உரிய வேளையில் வழங்கி வருகின்றது."

வடமாகாண ஆசிரிய சங்க சகாய நிதிச் சங்க 31வது வருடாந்த பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றிய திரு ப. சண்முகராசா இவ்வாறு கூறினார்.

யாழ் இந்துக்கல்லூரியில் இக்கூட்டம் நடைபெற்றது. 1991ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் உறுப்பினர் ஒருவர் இறந்தால் அவருடைய உரிமையாளருக்கு மரண சகாயத்துக்கு புறம்பாக சங்க ஒதுக்குநிதியில் இருந்து அந்திய காலச்செலவுக்காக ஆயிரம் ரூபா பணம் உடனடியாக வழங்குவது என்றும்தற்காலிக உறுப்பினர் பதவியை இழந்திருப்பின் மரணமடையும் வேளையில் இத்தீர்மானம் பொருந்தபது எனவுப் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

## தலை வெட்டப்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் பொதுமக்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இச்சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

## உரும்பிராய் விவசாயிகளுக்கு நீர்இறைக்கும் இயந்திரம்

(உடுவில்)

நீர் இறைக்கும் இயந்திரங்களை சொந்தமாக வைத்திராத உரும்பராயைச் சேர்ந்த விவசாயிகளுக்கு பொதுநிறுவனங்களூடாக நீர் இறைக்கும் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்படவுள்ளன.

இந்நீர் இறைக்கும் இயந்திரங்களை அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் வழங்கியுள்ளது.

உரும்பராய் கற்பக விநாயகர் மகளிர் ஐக்கிய நாணய சங்கம், உரும்பராய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம் போன்ற பொதுநிறுவனங்களூடாக இவை வழங்கப்படவுள்ளன.

அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் அண்மையில் இவற்றினூடாக விவசாயிகள் கடன் அடிப்படையில் விதைதானியங்கள், உரம் மண்ணெண்ணை போன்றவற்றை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது (109)

## இராணுவ நடவடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்துகொடுக்க முன்வந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம், வல்வெட்டித்துறை சிவகுருவித்தியாலயம், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், மண்கும்பான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, வேலணை மகாவித்தியாலயம், ஊர்காவற்றுறை... அருணோதயாக் கல்லூரி, சுருவில் மகாவித்தியாலயம், நாரந்தனை வித்தியாலயம், சின்னமடு வித்தியாலயம், அல்லைப்பிட்டி சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளேஇவ்வாறு திருத்தியமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (109)

## படையினரால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் இலுப்படிச்சேனையைச் சேர்ந்த நாற்பது வயதான குடும்பஸ்தரான ரத்தினம் என்பவரை சுட்டுக்கொன்றுள்ளார்கள். அத்துடன் கரடியனாற்றைச் சேர்ந்த நாற்பத்தைந்து வயதான குடும்பஸ்தரான சுப்பு என்பவரையும் கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றுவிட்டனர்.

## இடமாற்றம்

(பருத்தித்துறை)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலக நிர்வாக அதிகாரி என். பாலசுப்பிரமணியம் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலக நிர்வாக அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார். கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலக நிர்வாக அதிகாரியாக திரு எம். தம்பிப்பிள்ளை பொறுப்பேற்றுள்ளார். (52)

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Regesteted as a News Paper at the General Post office Lankaunder Licence numper B/100306/81.